## சார்பு நீதிமன்றம், தாராபுரம்

## EP.82/2024 IN OS.No.378/2023

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் நாள் செவ்வாய்கிழமை வா.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு.கே.சக்திவேல், எம்.ஏ., எல்.எல்.எம், சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது. சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | பிரசாந்த் | த/பெ.: | மாரிமுத்து |
| கிராமம்: | கொளத்துப்பாளையம் | தாலுக்கா: | தாராபுரம் |
| மதம்: | இந்து | தொழில்: | வங்கியின் கிளை மேலாளர் |
| வயது: | 35 | முகவரி: | கொளத்துப்பாளையம், தாராபுரம் வட்டம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on the day of 29.04.2025

**முதல் விசாரணை :–**

நான் வழக்கில் வாதி வங்கியின் கிளைமேலாளர் ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் நான் சொன்னதுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என் தரப்பு சான்றாவணங்களாக, ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. ஆகையால் கோர்ட்டார் அவர்கள் கிருபை செய்து நிறைவேற்று மனுவில் 7,8 காலங்களில் கண்டுள்ள தொகைகளும் பின்வட்டி செலவு தொகை வகையறாவும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் வசூலாகும் பொருட்டு எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளை வாரண்டில் பிடித்து வந்து பின்பு சிபிசி55 பிரிவின் படி சிவில் ஜெயிலில் வைத்து தொகைகளை வசூல் செய்து கொடுக்கும்பொருட்டு தக்க உத்தரவாக வேண்டுமாய் பிராத்திக்கிறேன்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

(ஒப்பம்.கு.சக்திவேல்)
சார்பு நீதிபதி
தாராபுரம்.